**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை.**

**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

| | | | |
|---|---|---|---|
| **அசல் வ.எண்** | **175 /2019** | **வா.சா** | **1** |
| **பெயர்** | **ராஜேந்திரன்** | **வயது** | **58** |
| **த/பெ** | **முனியன்** | **மாவட்டம்** | **கிருஷ்ணகிரி** |
| **தொழில்** | **அரசு பேருந்து ஓட்டுநர்** | **ஊர்** | **முருக்கந்தால்** |

The Oaths Act 1969, Act No.44/1969-ன் விதிமுறைகளின் படி 23.04.2025 நாளாகிய இன்று Thiru.A.Mohamed Ali,B.Sc.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் வாதி. வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனது தகவலின் பெயரில் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

1. 26.09.2018 -ம் தேதியில் எனக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குமிடையே ஏற்பட்ட கிரைய உடன்படிக்கை ஆவண எண் 3862/2018 ஆவணத்தின் அசல் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 02.06.2019 -ம் தேதியில் மீதி கிரைய தொகை ரூ.1,00,000/-ஐ பெற்றுக்கொண்டு வா.சா.ஆ. 1-ல் 1-ம் பிரதிவாதி செய்து கொடுத்துள்ள வரவு அசல் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 14.08.2019 -ம் தேதியில் நான் 1 -ம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 28.08.2019-ம் தேதியில் 1-ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்குறிய அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஓம்/- திரு. முஹம்மது அலி, பி.எஸ்.சி. பி.எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.